திலும் இல்லை. (குறுக்கீடுகள்) எந்தச் சட்டமன்றத்திலும் இப்படி இல்லை, அண்மையில் கூட ஆந்திரா சட்டமன்றத்தில் உறுப்பினர்களை வெளியேற்றியபோது. மற்ற உறுப்பினர்களை எல்லாம் அவை காலவர்களை வைத்து வெளியேற்றினார்கள், (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரான என்.டி. ராமாராவ் மட்டும் தானே வெளியேறினார். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவையை விட்டு வெளியேற வேண்டும், (கூச்சல்-குழப்பம்) திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களையும். தற்போது அவையில் முறை தவறி நின்றுகொண்டு பேரவையின் அலுவல்களைத் தடுத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் அவைக் காவலர்கள் வெளியேற்ற கேட்டுக் கொள்கிறேன், (கூச்சல்-குழப்பம்),

(எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும். அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்),

திரு. ஜானகிராமன். திரு. ஞானசேகரன். திரு. பீட்டர் அல்போன்ஸ். திரு. புரட்சிமணி ஆகியோர் இங்கே கோஷம் எழுப்பியது முழுக்க முழுக்க விதிமுறைகளுக்கு மாறான செயல். கண்டனத்திற்கு உரியது, அவையின் விதிகளின்படி இல்லாமல் அனைத்து முறையிலும் கண்டனத்திற்குரிய வகையில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் நடந்து கொண்டிருக்கிறார்கள், இது முழுக்க முழுக்கக் கண்டனத்திற்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

<u>திரு. வே. தம்புசாமி :</u> மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்),

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. தம்புசாமி உட்கார வேண்டும். இது வேறு பிரச்சினை,

4. விதி 110-ன் கீழ் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை,

காவிரி டெல்டாப் பகுதியில் சம்பா பருவத்தில் ஏகபோக நெல் கொள்முதல் 1—5—1993 முதல் நிறுத்தப்படுவது குறித்தும் நெல், அரிசி ஆகியவற்றைத் தடையின்றி பிற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வது குறித்தும்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16—12—1992 முதல் 30—6—1993 வரை காவிரி டெல்டா பகுதியில் சம்பா பருவத்தில் ஏகபோகக் கொள்முதல் நடைபெற அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (குறுக்கீடு)

TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE

சம்பா கொள்முதல் இலக்கு 12 இலட்சம் டன் நெல் என்று அரசு நிர்ணயித்துள்ளது, இந்த இலக்கு 12—4—1993 அன்று எய்தப்பட்டுவிட்டது,

(திரு. வே, தம்புசாமி மற்றும் திரு, ஜி, பழனிசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்).(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, இளம்வழுதி உட்கார வேண்டும், (குறுக்கீடு) இது வேறு பிரச்சினை, விதி 110-இன்கீழ் அமைச்சரின் அறிக்கை, இதிலே குறுக்கிடக் கூடாது,

மாண்புமிகு திரு, ஜி, விசுவநாதன்: 26—4—1993 அன்றைய நிலவரப்படி 12 இலட்சத்து 20 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விட்டது, (குறுக்கீடு),

(திரு. இளம்வழுதி அவையிலிருந்து வெளியேறினார்)

காவிரி டெல்டா பகுதியில் அறுவடையும் அநேகமாக முடிந்து விட்டது, தற்போது அரசின் கையிருப்பில் உள்ள நெல்லும் அரிசியும். மைய அரசு மாதந்தோறும் தனது தொகுப்பிலிருந்து வழங்கும் அரிசியும் பொது விநியோகத் திட்டத்தைத்தொடர்ந்து செயல்படுத்தத் தேவையான அளவுக்கு உள்ளது, இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு காவிரி டெல்டா பகுதியில் அரசு ஏகபோகக் கொள்முதலை மேலும் தொடர்வதைக் குறித்து பரிசீலித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் லாபியில் இருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்திக் கொண்டிருக்கக்கூடாது. வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களைக் காவலர்கள் அங்கேயிருந்தும் வெளியேற்றுவார்கள்.

நண்பகல் 12.10

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: தற்சமயம் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் தாராளமயமாக்கப்பட்ட—லிபர்லைசேஷன்—கொள்கை அடிப்படையில் தேவையற்ற கட்டுப்பாடுகள் நீக்கப் பட்டு. மாநிலம் முழுவதும் தடையின்றி சீராக உணவு தானியங்கள் கொண்டு செல்லப்பட்டால் வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும், குறைந்த விலையிலும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சென்ற ஆண்டில் வணிக லெவியை நிறுத்தி வைத்ததன் விளைவாக இத்தகைய சூழ்நிலை ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது தற்போது காவிரி டெல்டாப்பகுதி நீங்கலாக ஏனைய பகுதிகளில் எந்தவித கட்டுப்பாடுமின்றி நெல், அரிசி கொண்டு செல்லலாம். காவிரி டெல்டா பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளையும் நீக்கி விட்டால் மாநிலம் முழுவதும் எவ்வித கட்டுப்பாடுமின்றி நெல், அரிசி கொண்டு போக முடியும். இதனால் வெளிச் சந்தையில் அதிகமான அளவுக்கு அரிசி கிடைக்கவும், விலை குறையவும் வாய்ப்புகள் உள்ளன. எனவே, அரசு காவிரி டெல்டாப் பகுதியில் தற்சமயமுள்ள ஏகபோக கொள்முதலை 1-3—1933 முதல் நிறுத்தித்

கொள்ள முடிவு செய்துள்ளது. இதன்பின் விவசாயிகள் அவர்கள் கைவசம் நெல் இருந்தால், அதை வெளிச் சந்தையில் தங்கு தடையின்றி விற்றுக்கொள்ளலாம். எனினும் விவசாயிகளுக்கு, நல்ல விலை கிடைக்கும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் காவிரி டெல்டா பகுதியில் உள்ள தனது கிட்டங்கிகளில் நெல்லை கொள்முதல் விலைக்கு வாங்கிக் கொள்ளும். அரசின் இந்த முடிவினால், பொதுமக்களுக்கு வெளிச் சந்தையில் தாராளமாகவும், குறைந்த விலையிலும் அரிசி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

5. பேரவைப் பணிகளினின்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தற்காலிகமாக நீக்கிவைக்கப்பெறுதல்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இன்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று காங்கிரசைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் விரும்பியபோது, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம் இன்று என்று பெருந்தன்மையோடு தாங்கள் கூறினீர்கள். பெருந்தன்மையோடு கூறினீர்கள் என்பது மட்டுமல்ல, முழு விளக்கத்தைத் தருவதற்கும் இடம் தந்தீர்கள்.

அதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் பரிதி இளம் வழுதி அவர்களுக்கு நீங்கள் வாய்ப்புத் தந்தீர்கள். அவர்கள் முழு விளக்கத்தையும் தரும் போது, ஆளும் கட்சியைச் சேர்ந்த யாரும் குறுக்கீடு செய்யவே இல்லை. அவர்கள் முழுவதும் ஒத்திவைப்பதற்கான காரணத்தை தான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறார்களே தவிர, தீர்ப்பு வழங்கக் கடமைப்பட்டவர்கள் அல்ல. அந்தக் காரணங்களைச் சொல்லாமலேயே அவர்கள் தீர்ப்பு வழங்கி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் ராஜினாமா செய்யவேண்டும், இந்த அமைச்சரவையும் ராஜினாமா செய்யவேண்டும் என்று அவர்களே முடிவு கட்டி, அவர்களே தீர்ப்பையும் வழங்குவதற்குக் கூட நீங்கள் இடம் தந்தீர்கள். அதற்குத் தக்க பதில் சொல்கிற வகையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விரிவாகவும் சொன்னார்கள், தெளிவாகவும் சொன்னார்கள். ஏற்பட்டு இருக்கிற நிலைமைகள் என்ன என்பதையும் சொன்னார்கள். ஏன் இப்படிப்பட்ட கட்டம் வந்தது என்பதையும் சொன்னார்கள். அரசாங்கம் திட்டவட்டமாகத் தெளிவாக இருந்த முடிவை மாற்றியதே நீதிமன்றம்தான் என்பதையும் சொன்னார்கள். நீதிமன்றம் மாற்றியதுமட்டுமல்லாமல், நீதிமன்றத்திலுடைய ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலே இந்த அரசு இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே செய்து கொண்டு வருகிறபோதுதான்,